**ஜனவரி – 12**


# TNPSC துளிகள்

- 2021 ஆம் ஆண்டுடிற்கான சுவச் சர்வேக்சன் கணக்கெடுப்பின் படி, நொய்டா ஒரு தூய்மையான நடுத்தர நகரம் (3 முதல் 10 லட்சம் வரையிலான மக்கள்தொகை) என்ற தகுதி நிலையினைச் சமீபத்தில் பெற்றது.
    - சுவச் சர்வேக்சன் என்பது இந்தியாவில் தூய்மை, சுகாதாரம் மற்றும் துப்புரவு உள்ளிட்டவை பற்றி இந்தியத் தரத்திற்கான குழுவால் மேற்கொள்ளப்படும் ஒரு வருடாந்திரக் கணக்கெடுப்பாகும்.

# தேசியச் செய்திகள்

## உலக சூர்ய நமஸ்கார் நிகழ்ச்சி

- மகர சங்கராந்தி (ஜனவரி 14, 2022) நாளன்று, "உலக சூர்ய நமஸ்கார்" என்ற ஒரு செயல் விளக்க நிகழ்ச்சியை நடத்துவதற்கு ஆயுஷ் அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- இந்த நிகழ்ச்சியானது இந்தியா முழுவதும் 75 லட்சம் மக்களைக் கொண்டு நடத்தப்பட உள்ளது.
- இந்த நிகழ்ச்சியானது புவி வெப்பமடைதல் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த செய்தியையும் எடுத்துரைக்க முயல்கிறது.





## கல்வி நிறுவனங்கள் குறித்த சர்வதேச மாநாடு 2022

- கல்வி நிறுவனங்கள் குறித்த ஒரு சர்வதேச மாநாடானது குஜராத்தின் அகமதாபாத் நகரிலுள்ள அறிவியல் நகரில் அமைந்த விஞ்ஞான் பவனில் நடத்தப்பட்டது.
- 2022 ஆம் ஆண்டின் ஆற்றல்மிக்க குஜராத் உலக உச்சி மாநாட்டின் வழியின் கீழ், உலக அளவில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் இந்திய அரசின் கல்வித் துறை அமைச்சகம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஈடுபாட்டின் மூலம் இந்த மாநாடானது நடத்தப்பட்டது.
- இது 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையின் பல்வேறு கண்ணோட்டங்கள் குறித்தும், உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வியினை மாற்றியமைப்பதில் அதன்

பங்கு குறித்தும் கலந்தோலோசிப்பதற்காக கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கென ஓர் அரங்கினை வழங்கியது.




## IAC விக்ராந்த்





- INS விக்ராந்த் என்பது (IAC-I) இந்தியாவில் கட்டமைக்கப்பட்ட முதல் விமானந் தாங்கிப் போர்க் கப்பல் ஆகும்.
- இது இந்தியக் கடற்படையின் கடற்படை வடிவமைப்பு இயக்குநரகத்தினால் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இது கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டு வருகிறது.
- இதன் மொத்த நீளம் 263 மீட்டர் மற்றும் அகலம் 63 மீட்டர் ஆகும்.

- இது போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் உள்ளிட்ட 30 வகை விமானங்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## அகல்நிலை (ஆஃப்லைன்) பரிவர்த்தனைகள்



THE FRAMEWORK

- Payments can be carried out face to face using any channel or instrument like cards, wallets, mobile devices, etc
- Transactions are subject to an upper limit of ₹200; overall limit on a payment instrument shall be ₹2,000 at any point in time
- Transactions would not require an Additional Factor of Authentication
- But, replenishment of used limit shall be allowed only in online mode with AFA
- Offline mode of payment can be enabled only after obtaining specific consent of the customer


- இந்திய ரிசர்வ் வங்கியானது, எண்ணிம முறையில் மேற்கொள்ளப்படும் சிறு மதிப்பிலான அகல்நிலைப் பரிவர்த்தனைகளுக்கான ஒரு கட்டமைப்பினை அறிமுகம் செய்துள்ளது.
- அகல்நிலைப் பண வழங்கீடுகளை அட்டைகள், வாலட்ஸ் (பணவைப்புக் கணக்குகள்) அல்லது கைபேசி (சிறு) சாதனங்கள் போன்ற எந்தவொரு வழியாகவும் மேற்கொள்ளலாம்.
- ஆனால் அவற்றை அருகாமையில் (அ) நேருக்கு நேரான ஒரு பரிவர்த்தனை போன்ற முறைகளில் மட்டுமே மேற்கொள்ளலாம்.
- அந்த அகல்நிலைப் பரிவர்த்தனையானது மோசமான அல்லது தரம் குறைந்த இணைய வசதி அல்லது தொலைதொடர்பு இணைப்பு உள்ள பகுதிகளில், குறிப்பாக புறநகர் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் டிஜிட்டல் (எண்ணிம) பரிவர்த்தனைகளை அதிகரிக்கச் செய்யும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## புதிய கோவிட் திரிபு ‘டெல்டாக்ரான்’

- டெல்டா மற்றும் ஓமைக்ரான் ஆகியவை இணைந்து உருவான ஒரு புதிய கோவிட்-19 திரிபானது சைப்ரஸ் நாட்டில் கண்டறியப்பட்டது.
- இதற்கு “டெல்டாக்ரான்” (deltacron) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

- டெல்டா மரபணுக்களின் உள்ளேயே ஓமைக்ரான் போன்ற மரபணு அடையாளங்கள் கண்டறியப் பட்டதனால் இதற்கு இது போன்று பெயரிடப்பட்டது.




# மாநிலச் செய்திகள்

## நகர்ப்புற வனப் பூங்கா – கைபேசி செயலி

- தெலுங்கானா மாநிலமானது நகர்ப்புற வனப் பூங்கா கைபேசி செயலி என்ற ஒரு செயலியை முதன்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது ஒரு கருத்து சார்ந்த ரீதியில் நகர்ப்புற வனப் பூங்காக்கள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் வழங்கும் ஒரு பிரத்தியேக கைபேசி செயலி ஆகும்.
- இது பார்வையாளர்கள் தங்களது வருமை மற்றும் பயணங்களை முன்கூட்டியே திட்டமிடுவதற்கான வசதியையும் வழங்குகிறது.

## சர்வதேச கைவினை விருது




- கோவளம் அருகே அமைந்துள்ள கேரளக் கலைகள் மற்றும் கைவினை கிராமத்திற்கு ஆண்டின் சிறந்த கைவினைக் கிராமம் என்ற பிரிவில் 2021 ஆம் ஆண்டிற்கான

சர்வதேச கைவினை விருதானது வழங்கப்பட்டுள்ளது.

- இது மாநிலச் சுற்றுலா மேம்பாட்டிற்காக வேண்டி உராலுங்கல் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சமுதாயத்தினால் (Uralungal Labour Contract Co-operative Society) நிறுவப்பட்ட ஒரு பகுதி ஆகும்.
- மலேசியாவிலுள்ள 'கிராஃப் கொமுனிதி கு' என்ற கைவினைக் கிராமமானது முந்தைய ஆண்டின் சிறந்த கைவினைக் கிராமமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

## முதல் ஹெலி – மையம்

- அனைத்து வான்வழிப் போக்குவரத்து வசதிகளுடன் கூடிய இந்தியாவின் முதல் ஹெலி மையமானது அரியானாவின் குருகிராம் நகரில் அமைக்கப்பட உள்ளது.
- ஹெலிகாப்டர்களுக்கென அனைத்து வசதிகளையும் ஒரே இடத்தில் கொண்டுச் செயல்பட உள்ள நாட்டின் முதல் மையமாக இது திகழும்.
- ஹெலிபோர்ட் (உலங்கு ஊர்தி தரையிறங்கி ஏறும் இடம்) பணிமனை, வான்வழி வாடகை வாகனங்களின் பராமரிப்பு மற்றும் தனிநபர் பயன்பாட்டு ஹெலிகாப்டர்கள் உள்ளிட்ட அனைத்து வகையான விமான வசதியும் இங்கு கிடைக்கப் பெறும்.



## லோசூங் திருவிழா

- லோசூங் (நாம்சூங்) என்பது திபெத்திய சந்திர நாள்காட்டியின் 10வது மாதத்தில் 18வது நாளன்று சிக்கிம் மாநிலம் முழுவதும் ஒவ்வோர் ஆண்டிலும் கொண்டாடப்படும் ஒரு திருவிழா ஆகும்.
- இது அறுவடைப் பருவத்தின் தொடக்கத்தினையும் குறிக்கிறது.
- லோசூங் திருவிழாவானது சிக்கிமிய பூஷியா இனத்தவரால் சோனம் லோசூங் எனவும் லெப்ச்சா இனத்தவரால் நாம்சூங் எனவும் கொண்டாடப்படுகிறது.
- இந்தத் திருவிழாவானது நேபாளம் மற்றும் பூடான் ஆகிய பகுதிகளிலும் கொண்டாடப்

படுகிறது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## டாக்டர் சுபாஷ் முகர்ஜி விருது

- கர்நாடகாவின் மணிப்பாலில் உள்ள கஸ்தூரிபாய் மருத்துவக் கல்லூரியின் மருத்துவக் கருவளர்வியல் துறையின் பேராசிரியர் டாக்டர் சதீஷ் அடிகா இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இவர் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து டாக்டர் சுபாஷ் முகர்ஜி என்ற விருதினைப் பெறுவார்.
- சோதனைக் குழாய் மூலம் கருவுறுதல் துறையில் அவர் ஆற்றிய ஒரு சிறப்பானப் பங்களிப்பிற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- இவர் மருத்துவச் சோதனைக் குழாய் மூலம் கருவுறுதல் மற்றும் கருவுறு திறன் ஆராய்ச்சி ஆகிய இரண்டு துறைகளிலும் குறிப்பிடத்தக்கப் பங்கினை ஆற்றியுள்ளார்.

## உர்ஜித் படேல்




- உர்ஜித் படேல், சமீபத்தில் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் துணைத்

தலைவராக நியமிக்கப் பட்டார்.

- இவர் இந்திய ரிசர்வ் வங்கியின் 24வது ஆளுநராகப் பணியாற்றியவர் ஆவார்.
- இவர் கென்யா நாட்டில் பிறந்தவராவார்.

## கோல்டன் குளோப் விருதுகள் 2022



- 2022 ஆம் ஆண்டிற்கான கோல்டன் குளோப் விருதினை வென்றவர்களின் பெயர்கள் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 10 அன்று நடைபெற்ற ஒரு தனியார் விழாவில் அமெரிக்காவின் ஹாலிவுட் அயல்நாட்டுப் பத்திரிக்கைச் சங்கத்தினால் அறிவிக்கப் பட்டன.
- இந்த ஆண்டு, இந்த நிகழ்ச்சியானது தொலைக்காட்சியில் ஒளிபரப்பப் படாமல் (அ) நேரலையில் வெளியிடப்படாமல் எந்தவொரு தொகுப்பாளரும் அல்லது நியமனப் பட்டியலில் உள்ளவர்களும் இன்றி மற்றும் எந்த ஒரு சிவப்புக் கம்பள வரவேற்புமும் இன்றி நடத்தப் பட்டது.
- நெட்ஃப்ளிக்ஸ் ஊடகத்தின் "The power of the dog" எனும் திரைப்படமானது 2022 ஆம் ஆண்டு கோல்டன் குளோப் விருது விழாவில் சிறந்த திரைப்படம்-நாடகம் என்ற ஒரு விருதினை வென்றது.
- 20வது சென்சூரி ஸ்டுடியோஸ் நிறுவனத்தின் "West Side Story" திரைப்படமானது சிறந்த திரைப்படம் – இசை சார்ந்த (அ) நகைச்சுவைப் படம் என்ற விருதினை வென்றது.
- HBO ஊடகத்தின் தொடரான Succession சிறந்த தொலைக்காட்சித் தொடர் – நாடகம் என்ற விருதினை வென்றது.
- HBO ஊடகத்தின் Max's Hacks சிறந்த தொலைக் காட்சித் தொடர் – இசை சார்ந்த (அ) நகைச்சுவை என்ற விருதினை வென்றது.
- 2021 ஆம் ஆண்டு வெளியான 'King Richard' எனும் திரைப்படத்தில் தான் ஆற்றிய ஒரு கதாபாத்திரத்திற்காக வில் ஸ்மித் தனது முதல் கோல்டன் குளோப் விருதினை வென்றார்.
- "Being the Ricardos" என்ற திரைப்படத்தில் தான் ஆற்றிய ஒரு கதாபாத்திரத்திற்காக நிகோலே கிட்மேன் சிறந்த நடிகைக்கான கோல்டன் குளோப் விருதினை வென்றார்.
- "The Power of Dog" என்ற திரைப்படமானது சிறந்த இயக்குநருக்கான கோல்டன் குளோப்

விருதினையும் வென்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## உலக காது கேளாதோர் T20 கிரிக்கெட் சாம்பியன்சிப் போட்டி – 2023

- அகில இந்திய காது கேளாதோர் விளையாட்டுக் கழகமானது முதலாவது உலக காது கேளாதோர் T20 கிரிக்கெட் சாம்பியன்சிப் போட்டியினை நடத்துவதற்கு வேண்டி சர்வதேச காது கேளாதோர் விளையாட்டுக் குழுவிடமிருந்து ஒப்புதல் பெற்றுள்ளது.
- முதலாவது உலக காது கேளாதோர் T20 கிரிக்கெட் சாம்பியன்சிப் போட்டியானது 2023 ஆம் ஆண்டு ஜனவரி 10 முதல் 20 ஆம் தேதி வரையில் கேரளாவின் திருவனந்தபுரத்தில் நடத்தப் படும்.

## 73வது சதுரங்க கிராண்ட்மாஸ்டர்



Bharath Subramaniyam has become the year's first Indian GM.

- தமிழ்நாட்டினைச் சேர்ந்த 14 வயதான பரத் சுப்ரமணியம் இந்தியாவின் 73வது செஸ் (சதுரங்கப் போட்டி) கிராண்ட் மாஸ்டர் ஆகியுள்ளார்.
- இவர் இத்தாலியில் கத்தோலிக்கா என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு போட்டியில் கிராண்ட் மாஸ்டருக்கான 3வது மற்றும் இறுதி விதிமுறைகளை நிறைவு செய்தார்.

- அவரது சக இந்தியப் போட்டியாளரான M.R. லலித் பாபு அப்போட்டியின் வெற்றியாளர் ஆனார்.

# முக்கிய தினங்கள்

## உலக இந்தி மொழி தினம் – ஜனவரி 10

- இந்தி மொழியை உலக அளவில் ஊக்கப்படுத்தும் வகையில் 2006 ஆம் ஆண்டு முதல் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது 1975 ஆம் ஆண்டு ஜனவரி 10 அன்று, முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் தொடங்கப்பட்ட முதல் உலக இந்தி மாநாட்டின் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- எனினும், முதலாவது உலக இந்தி மொழி தினமானது 2006 ஆம் ஆண்டு ஜனவரி 10 அன்று முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் தொடங்கப்பட்டது.
- இந்தி மொழியானது, ‘சிந்து நிலம்’ (The Land of Indus) எனப் பொருள்படுகின்ற ‘ஹிந்த்’ எனப் படும் ஒரு பாரசீக வார்த்தையிலிருந்து இப்பெயரை பெற்றது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★